Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 65 ராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி, ... என்றென்றைக்கும் ஸ்தோத்தரிப்பேன் சங்.145:1 செப்டம்பர் 2019 No.9

பாவ உலகில் பரிசுத்தத்தை காத்துக்கொள்ளுதல்

Staying pure in a sinful world

T.A.Hegre (1908-1984)

நாம் உண்மையாக மறுபடியும் பிறந்துவிட்டால், நம்மில் தேவனுடைய சாயலைப் பெற்றுக்கொள்ள ஒரு விருப்பம் ஏற்படும். நாம் எப்படி பரிசுத்த வாழ்வைப் பெறலாம்? தேவன் எப்படி நம்மைப் பரிசுத்தமாக்குகிறார்?

மனிதன் பாவம் செய்தபோது தனது களங்கமற்ற தன்மையை இழந்து குற்றவாளியானான். அவன் தனது ஆவிக்குரிய வாழ்வை இழந்து அக்கிரமத்திலும், பாவத்திலும் மரித்துவிட்டான். அவன் தனது வலிமையை இழந்து உலகத்திற்கும் பிசாசிற்கும் அடிமைப்பட்டுவிட்டான். இவை எல்லாவற்றிலும் அவனது மிகப்பெரிய இழப்பு இதய பரிசுத்தமாகும்.

ஆனால் விழுந்து போன அனைத்து மனிதரின் தேவைக்கும் தேவனுடைய மிகப்பெரிய இரட்சிப்பு சமமானது. இழந்துபோன இருதய பரிசுத்தத்தை திரும்பப்பெறவும் வரப்போகிற வாழ்வின் பரிபூரணத்திற்காகவும் தேவையான அனைத்தையும் தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார்.

1. இரத்தத்தால் பரிசுத்தமாக்கப்படுகிறோம்

கிறிஸ்து கல்வாரிச் சிலுவையில் நமது பாவ நிவாரணத்திற்கு ஒரே ஆதாரமும் பரிபூரணமுமாக தமது இரத்தத்தை சிந்தினார். மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற யாவருக்கும் பாவமன்னிப்பு உண்டு. மனிதன் ஏதேன் தோட்டத்தில் விழுந்து போன நாளிலிருந்தே மிருக பலி ஆரம்பமானது என்பதை பழைய ஏற்பாடு விவரிக்கிறது. புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவே பலியாக வந்தார் என்பதை யோவான் 'இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி' *(யோவா.1:29)* என்று சுட்டிக் காண்பித்தார்.

1 யோவான் 1:7-9 படிக்க

இயேசுவின் இரத்தம் நம்மைத் தூய்மைப்படுத்தக்கூடிய காரணி. எபி.9:22-ன் படி "நியாயப் பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும். இரத்தம் சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது". இயேசுவின் மூலம் தேவன் மனந்திரும்புகிற விசுவாசியை மன்னித்து சுத்தம் பண்ணுகிறார். அவர்கள் பரத்திலிருந்து பிறப்பதால் அந்நேரமுதல் நித்திய ஜீவனை சுதந்தரிக்கிறார்கள்.

2. சிலுவையினால் பரிசுத்தமாக்கப்படுகிறோம்

நாம் சிலுவையினாலும் பரிசுத்தமாக்கப்படுகிறோம். பாவம் மனிதனுடைய எல்லாப் பகுதியையும் பாதித்துவிட்டது. மீட்பு என்பது எளிதானதல்ல. அது தேவனுடைய ஞானம் மற்றும் வல்லமை செயல்பட வேண்டிய ஒரு சிக்கலான பிரச்சனை. பாவ மன்னிப்பையும் நித்திய ஜீவனையும் வாக்குப்பெற்றவர்கள் பாவ மன்னிப்பைவிட ஆழமான தேவையை உணருவார்கள். பாவத்தின் செயல்பாடுகளைவிட நமக்குள்ளே பாவம் நிறைந்த தன்மை காணப்படுகிறது. அது மன்னிக்கப்பட முடியாதது, அது சாகவேண்டும்.

மனித தீய தன்மையைக் குறித்து "நாமெல்லாரும் ஆடுகளைப்போல் வழி தப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்" என்று ஏசா.53:6 குறிப்பிடுகிறது. இந்த 'தன்தன் வழி' என்பது சுயநலம். அது மனித பாவத் தன்மையின் ஆணிவேர். அதை மன்னிக்க முடியாது. அதற்கு முடிவு கட்டப்பட வேண்டும். 'எனக்கு என் பாதை' என்பது சிலுவையிலறையப்பட வேண்டும்.

நமது சுயநல செயல்களை தேவன் மன்னிப்பார். ஆனால் சுயநல வழியில்தான் நடப்பேன் என்று பிடிவாத மாயிருப்பதை மன்னிக்க முடியாது. இதை முடிவுக்குக் கொண்டு வருவது சிலுவை. எனவேதான் மத்.16:24-ல் இயேசு "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்று சீஷரிடம் கூறினார்.

ரோமர் 6-ம் அதிகாரத்தில் அப்.பவுல் இதைக் குறித்து தெளிவாக எழுதுகிறார். முதல் வசனத்தில், ".....கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலை நிற்கலாம் என்று சொல்லுவோமா?" என்று கேட்கிறார். 'கூடாதே' என்று பதிலுமளிக்கிறார். சுயவாழ்வின் உள்ளான கேடுகளைக் குறித்தும் அதை தேவன் எப்படி சீர்ப்படுத்துவார் என்றும் தொடர்ந்து வாசிக்கிறோம்.

'நாம் இனி பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவ சரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, தம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்' ரோமர் 6:6. கிறிஸ்துவுடனே நாம் சிலுவையில் அறையப்பட்டுவிட்டால் பாவத்தின் வலிமை உடைந்துவிடும். நாம் பாவம் செய்வதில்லை.

கிறிஸ்து நமக்குப் பதிலாக நமது பாவங்களுக்காக மரிக்கிறார். அவர் நமது பாவங்களை சிலுவைக்கு எடுத்துச் செல்கிறார். அதற்கு மேலாக நம்மையே அங்கு கொண்டு செல்கிறார். இதுவே நாம் பாவமில்லாமல் வாழ தேவன் ஏற்படுத்திய வழி.

"அப்படியே நீங்களும் உங்களை பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்குள் பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்" ரோமர் 6:11. இந்த சத்தியத்தை நாம் அறிந்து விசுவாசித்து அதன்படி நடக்க வேண்டும். பாவத்திற்குக் கிறிஸ்துவுடன் மரிப்பது, அவரது உயிர்த்தெழுதலில் நமது உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் நமது பங்கை நாம் ஒத்துக் கொள்ளாவிடில் ஒருபோதும் பாவத்தின் மேலுள்ள வெற்றியை அறிய முடியாது.

அனுதினமும் இதற்காகத் தூய ஆவியானவரின் துணையுடன் கீழ்ப்படிவது ஒரு கடின அனுபவம். இதைக் குறித்து அப்.பவுல் "கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன், ஆயினும் பிழைத்திருக்கிறேன், இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" கலா.2:20.

இந்த சத்தியம் விசுவாசிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்பட வேண்டும். அதாவது நாம் உலகம், மாம்சம், பிசாசு ஆகியவற்றிலிருந்து தேவனுக்கு நேராகத் திரும்பி சுயம் முற்றிலும் சாகடிக்கப்பட வேண்டும்.

ஆவியினால் பரிசுத்தப்படுத்தப்பட வேண்டும்

நம்மை மன்னித்து, தூய்மைப்படுத்தும் கிறிஸ்துவின் இரத்தமும், சிலுவையும் தேவனுடைய பணியில் இரு எதிர்மறையான செயல்கள். இதோடு நேர்மறையான ஒரு பகுதி தூய ஆவியானவரால் நடைபெறுகிறது.

உயிர்த்தெழுதலின் நாளில் இயேசு சீஷர்கள் மேல் ஊதி பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் *(யோவா.20:22)* என்றார். ஐம்பது நாட்களுக்குப் பின்பு பெந்தெகொஸ்தே நாளில் அவர்கள் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : T. Peter, D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

கடிதங்கள், காணிக்கை, ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி : வருகையின் தூதன், நியூபோர்ட் தெரு, நாகர்கோவில் - 629 001
VARUKAYIN THOOTHAN, Newport Street, Nagercoil-629 001.
Mobile: 95432 21008, 9489740295, **e-mail:**Varukayinthoothan@hotmail.com
அலுவலகம் : காலை 10.00 முதல் 1.00 வரை
மாலை 02.00 முதல் 6.00 வரை
(ஞாயிறு விடுமுறை)

இம்மாத பொன்னான சிந்தனை

நமது தேசத்தின் ஜனங்களுக்காக மன்றாடி ஜெபிக்கவேண்டும் என்பதைவிட பெரிய பொறுப்பை தேவன் நமக்கு தரவில்லை.

– டாக்டர் பாப்பியர்ஸ்

வாக்குத்தத்தம்

உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார், வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன்.

யாத்திராகமம் 23:25

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

செப்டம்பர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், தாழ்மையுடனும் துதிக்கிறேன்.

உங்கள் கடிதங்கள்:

கடிதம் - 1

Praise the Lord *10.07.2019*

கர்த்தருக்குள் அன்பார்ந்த சகோதரர் அவர்களுக்கு, அன்பின் வாழ்த்துக்கள் கூறி சகோதரி எழுதுவது, என் அன்பின் ஸ்தோத்திரம் பல. தொடர்ந்து தூதன் அனுப்பி வருவதற்கு மிகுந்த நன்றி. உங்களுக்கு சுகம் தந்த தேவனுக்கு நன்றி ஜெபம் ஏறெடுக்கிறேன். தூதனுக்கு சந்தாவும் காணிக்கையும் ஒரு அன்பான சகோதரன் மூலம் அனுப்ப என் தேவன் தயை கூர்ந்துள்ளார். அவருக்கே துதி ஸ்தோத்திரம், கனம் உண்டாகட்டும். தூதனில் சந்தாதாரராக 64 முதல் இருப்பதற்கும், தொடர்ந்து இருக்கவும் விரும்புகிறேன்.

தற்போது மிகுந்த பலவீனம், அடிக்கடி ஏற்படும் சுகவீனம். வயது தற்போது 82 நடக்கிறது. முடிந்தவரை எனது பணிகளை செய்து கொள்வேன். முடியாமற்போகும் பட்சத்தில் பொறுமையுடன் ஏதும் இன்றி படுத்துக் கொள்வேன். வேத வசனங்கள் போதுமான ஆகாரமாயும், பெலனாயும் இருக்கிறது.

ஐயா உங்களுக்காகவும் தூதனின் தேவை, அலுவலக ஊழியர்கள், அலுவலகம், பத்திரிகை மற்றும் ஜெப கூடுகைகளுக்காக ஜெபித்துக் கொள்ளுகிறேன். எனது 2 பிள்ளைகள்; 3 பேரன்கள், 2 மருமகள் அனைவரும் நலமுடன் இருக்க உங்கள் ஜெபங்களில் முடிந்தால் நினைவுகூரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அன்பான சகோதரி C.S.

கடிதம் - 2

கோபி
அன்பார்ந்த ஐயா, *12.07.2019*

மீட்பர் இயேசுவின் பெயரில் உங்களுக்கு என் மேலான ஸ்தோத்திரம்.

உங்கள் வருகையின் தூதன் மாத இதழ் தவறாமல் கிடைக்கிறது. அதற்காக உங்களுக்கு என் பணிவான நன்றி. இந்த தொடர் கட்டுரைகள் பயனுள்ளதாக உள்ளது. அதன் தொடருக்காக நான் 10.07.2019-ல் இந்தியன் வங்கியில் ரூ.1500 செலுத்தியுள்ளேன். அதன் ரசீதுகள் இத்துடன் அனுப்பியுள்ளேன். பெற்றதும் உடன் ரசீது அனுப்பும்படி வேண்டுகிறேன்.

கிறிஸ்தவ பரப்புரை செய்திகளுக்கு எதிர்ப்புகள் கூடி வருகின்றன. இதற்காக ஜெபித்து வருகிறேன். உங்கள் செய்திகளுக்காக நான் தினமும் ஜெபிக்கிறேன். நல்ல சுகம் பெறவும் ஜெபிக்கிறேன்.

நன்றியுடன் கே.து.ப.

இம்மாத செய்தி:

நம்பமாட்டார்கள்

லூக்கா 16:31

"ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" என்றார் இயேசுகிறிஸ்து மத்தேயு 10:28.

நரகம் உண்டென நாம் விசுவாசித்தால் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த நம்மாலியன்ற அனைத்தையும் செய்வோம். நரகம் என்பது உண்மையெனில் நமது உறவினர்களுக்காக, நண்பர்களுக்காக, உடன் பணிபுரிவோருக்காக, பள்ளிகளுக்காக, நிறுவனங்களுக்காக மற்றும் மிஷன்களுக்காக கதறி அழுவோம். நரகம் இருப்பது உண்மையானால் நமது நகரங்களுக்காக, கிராமங்களுக்காக, தேசத்திற்காக புலம்பி அழுவோம். இந்தியாவில் ஒவ்வொரு வினாடியும் ஏறத்தாழ ஒரு நபர் மரணமடைகின்றனர். **அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்காக நீங்கள் கடைசியாக அழுதது எப்போது?**

இன்று கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பலர் தேவனை ஆரவாரத்தோடு ஆராதிக்கும் பரவசத்தில் லயித்துப் போய் இருப்பதால் பாவத்தில் மரிப்பவர்கள் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்களே என்ற சிந்தையின்றி வாழ்கிறார்கள் வெளி.21:8. நண்பர்களே, எண்ணற்ற சபைப் பணிகளில் மூழ்கியுள்ளோம். ஆனால் திருச்சபையின் மெய்யானப் பணிகளாகிய நற்செய்திமயமாக்குதலும், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துவதும் நிராகரிக்கப்பட்டுள்ளது. "**ஆம், நாம் வானத்தையே அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருக்கையில், பாவிகள் பாதாளத்திற்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.**"

ஒரு இளம் ஊழியரின் சாட்சி:

நரக கெடு பாதாளம்

அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியானவரின் பரிசுத்த இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட்ட தேவ மக்களுக்கு முடிவில்லாத நித்தியமான சூரிய அஸ்தமனமே இல்லாத ஒளிமயமான பகற்காலமாகும்.

மனந்திரும்பாத, பாவத்தில் வாழ்ந்து, பாவத்தில் மரிக்கின்ற தேவனற்ற மாந்தருக்கு முடிவில்லாத நித்தியமானது எக்காலத்தும் சூரிய உதயத்தை (அருணோதயத்தை) காணாத காரிருளின் காலமாகும்.

தேவனுடைய தேவ கோபாக்கினையை குறித்து பேசும் போது அதற்கு முழுமையாக சம்பந்தப்பட்ட எரிநரகத்தை குறித்து பேசாமல் இருப்பது கூடாத காரியமாகும். பிரசங்க பீடங்களிலிருந்து "எரிநரகத்தை" குறித்து அதிகமான பிரசங்கங்கள் இந்த நாட்களில் பிரசங்கிக்கப்படுவதே இல்லை. பிரசங்கிமார்கள் அந்த "நரகம்" என்ற பொருளில் தங்கள் வாழ்நாட்காலம் முழுவதிலும் ஒரு தடவை கூட பேசுவது என்பது மிகவும் அரிதாகும். ஆனால் ஆண்டவருடைய பரிசுத்த வேதாகமம் முழுவதும் நரகத்தை குறித்த எச்சரிப்பின் சத்தத்தால் நிரம்பி வழிகின்றது.

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன் ஊழியங்களின் தேவை மாதம் ரூபாய் 1 லட்சம்.
ஆண்டவர் உங்களை ஏவுகிறபடி உதாரத்துவமாய் உதவுங்கள்.

வங்கி கணக்கு :

பத்திரிகை : **VARUKAYIN THOOTHAN,** A/c. No.:431521036
Indian Bank,W.C.C. Road, Nagercoil-1
IFS Code : IDIB000N006

உபவாச ஜெபம் : **WESLEY DEVADASON,** A/c. No.: 370601000002557
I.O.B., Court Road, Nagercoil-1
IFSC Code : IOBA0000063

முன்னேற்றப்பணி : **WESLEY DEVADASON,** A/c. No.: 61822200136904
Syndicate Bank, W.C.C. Road, Nagercoil-1
IFSC Code : SYNB0006182

(2-ம் பக்க தொடர்ச்சி)

எனது தேவ ஊழியத்தின் ஆரம்ப கால நாட்களில் நான் ஒரு இளம் குருவானவராக ஒரு சபையில் தேவ ஊழியம் செய்து கொண்டிருந்தேன். நரகத்தை குறித்து சபை மக்களை எச்சரித்து பிரசங்கித்தால் அவர்கள் தடுமாற்றம் அடைந்து விடுவார்கள் என்று பயந்து நான் அந்த நாட்களில் அதை குறித்து பேசுவது கிடையாது.

அப்படிப்பட்ட கால கட்டத்திலே தேவன் ஒரு நாள் எனக்கு ஒரு தரிசனத்தை தந்தார். எனது முழு வாழ்க்கையிலும் நான் அந்த ஒரு தரிசனத்தைத்தான் கண்டிருக்கிறேன். **என்னுடைய அந்த தரிசனத்தில் மக்கள் நரகத்திற்குள் விழுந்து கொண்டிருப்பதை தேவன் எனக்கு காண்பித்தார்.** அந்த நாளிலிருந்து நான் நரகத்தை குறித்து மிகவும் விழிப்படைய ஆரம்பித்து நரகத்தை குறித்து திட்டமும் தெளிவுமாக பேசி வருகின்றேன்.

நான் எனது தரிசனத்தில் லண்டன் மாநகரத்தின் ஜனப்பெருக்கமான ஒரு பிரதான வீதியில் மக்களோடு மக்களாக நடந்து சென்று கொண்டிருந்தேன். ஜனங்கள் தங்கள் தங்கள் வேலைகளுக்கும் இதர காரியங்களுக்கும் ஒருவரையொருவர் நெருக்கி முண்டியடித்துக் கொண்டு சென்று கொண்டிருக்கும் ஒரு வேளையாக அது இருந்தது. மக்கள் ஒருவரையொருவர் நெருக்கி முன்னேறிக் கொண்டிருந்த வேளையில் அந்த பிரதான வீதியின் ஓரமாக ஒரு மனிதன் தனது கரத்தில் ஒரு சிகப்பு விளக்கை கையில் ஏந்தியவனாக "ஜனங்களே, பின்நோக்கி செல்லுங்கள், ஜனங்களே பின்னோக்கி செல்லுங்கள்" என்று சத்தமிட்டு கூக்குரலிட்டு எச்சரிக்கை செய்து கொண்டிருப்பதை கண்டேன்.

அந்த சமயம் பரிசுத்த ஆவியானவர் என்னை அப்படியே அந்த ஜனக்கூட்டத்திற்கு மேலாக தூக்கி எடுத்து அந்த மனிதன் "ஜனங்களே பின்நோக்கி செல்லுங்கள்" என்று எச்சரிக்கை குரல் எழுப்புவதன் காரணத்தை நான் கண்டு கொள்ளும்படியாக செய்தார்.

அந்த பிரதான பெரும் பாதையில் சென்று கொண்டிருக்கும் மக்கள் ஒவ்வொருவராக குறிப்பிட்ட ஒரு இடத்திற்கு வரவும் அதற்கு மேல் செல்ல ரஸ்தா இல்லாமல் அவ்விடத்திலிருந்து அதல பாதாளத்திற்குள் விழுவதை நான் கண்டு பெரும் பீதி அடைந்தேன். தங்களுக்கு முன்பாக மக்கள் ஒவ்வொருவராக விழுவதை கண்டு அந்த மக்கள் பின்நோக்கி செல்ல விரும்பி பின்நோக்கி செல்ல தங்கள் முழுபெலத்தால் போராடி கூட்டத்தை விலக்கி கொண்டு முன்னேற விரும்பினாலும் அவர்கள் பின்னால் நெருக்கி வந்து கொண்டிருக்கும் மக்கள் அவர்கள் திரும்பி போக முடியாதவாறு நெருக்கிக் கெடுபாதாளத்திற்குள் தள்ளுவதை நான் கண்டு நடுநடுங்கிப் போனேன், அந்த மக்கள் ஒவ்வொருவராக அலறிக் கொண்டு முடிவில்லாத நித்தியத்திற்குள் விழுவதை திகைப்போடு கவனித்தேன்.

முடிவில்லாத நித்தியத்தின் கெடு பாதாள பள்ளத்தாக்குக்குள் விழுந்து கொண்டிருந்த அந்த மாந்தர் எழுப்பிய அலறல், அங்கலாய்ப்பின் குரலானது அந்த நாளிலிருந்து என் உள்ளத்தில் அடிக்கடி தொனித்து என்னைச் சஞ்சலப்படுத்துவதாக இருப்பதால் நான் செல்லும் இடங்களில் எல்லாம் நரகத்தை குறித்து எச்சரித்து பிரசங்கித்து வருகின்றேன்.

இந்த கிருபையின் காலத்தில் மக்கள் ஞானமடைந்து இயேசு இரட்சகரில் அடைக்கலம் புகுந்துகொள்ள நான் மக்களை கெஞ்சி மன்றாடுகின்றேன்.

இதை வாசிக்கும் நீங்களும் ஒருக்கால் ஆண்டவர் இயேசுவை ஏற்று மனந்திரும்பாமல் இதுவரை பாவத்தில் ஜீவித்து வந்திருந்தால் இன்றே அவரை அண்டிக்கொள்ளுங்கள். தாமதித்தால் உங்களுடைய காலதாமதம், நீங்கள் கெடு பாதாளத்தில் விழாமல் தப்பிக்கொள்ளும்படியாக கடைசி நேரத்தில் நீங்கள் பின் நோக்கி திரும்பினாலும் நீங்கள் தப்பிக்கொள்ள முடியாமல் கூட்டமானது உங்களை நெருக்கி நரக பாதாளத்தில் தள்ளிப்போடும் என்பதை கண்ணீரோடு நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

சாத்தானின் சதி ஆலோசனைகள் யாவும் ஒரே ஒரு குறிக்கோளை மட்டுமே உடையது. ஆம், உன்னை நித்திய அக்கினிக்கு கொண்டு செல்லும்படியாக உன்னுடைய மரண நாள் மட்டும் உனக்கு தந்திர வலை வீசும் தந்திரவான் அவன். எனவே ஒவ்வொரு விநாடியும் உனக்காக இரத்தம் சிந்தி நித்திய பரலோகத்திற்கு அழைத்து செல்லும் உன் அன்பரின் பாத சுவட்டிலேயே நட. உன்னோடு இடைவிடாது பேசும் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவரின் மெல்லிய சத்தத்திற்கு கீழ்படி.

நீ பரலோக ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்வாய்.

*****

ஜூலை மாதம் 17-ம் தேதி மருத்துவ பரிசோதனைக்காக சென்னை செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். ஒரு அருமையான தாயார் எனக்கு போன் பண்ணி, 'கர்த்தர் உங்களுக்கு நல்ல சுகத்தைத் தந்து, ஆண்டவருடைய ஊழியத்தைச் செய்ய அதிகமான பெலனைத் தருவார்' என்று ஜெபத்தோடு வாழ்த்தினார்கள். 18-ம் தேதி மருத்துவ பரிசோதனையை முடித்தேன். அந்த கிறிஸ்தவ மருத்துவர், 'நீங்கள் வழக்கமாக போவீர்களே, அந்த கூட்டங்கள் என்ன ஆனது?' என்று அன்புடன் விசாரித்தார். தேவன் மட்டும் மகிமைப்படுவாராக.

வருடத்திற்கு ஒருமுறை மாத்திரம் காணிக்கை அனுப்புகிற தேவனுடைய பிள்ளைகள் குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்பும்படி அதிக அன்பாய் கேட்கிறேன்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்,

உதவி : 94897 40295
அலுவலகம் : 95432 21008

வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

எழுப்புதலுக்காக இதய கதறல் சென்னை 2020
Heart cry for Revival Chennai 2020

மாதம்	தேதி	இடம்
ஜனவரி	18.01.2020 3-வது சனி	Elohim Apostolic Church Pudichur, Chennai
பெப்ரவரி	08.02.2020 2-வது சனி	Christian Assembly Mission Ayanavaram, Chennai
மார்ச்		
ஏப்ரல்		
மே		
ஜூன்		
ஜூலை		
ஆகஸ்ட்		
செப்டம்பர்	19.09.2020 3-வது சனி	Jesus Cares Assembly Anna Nagar, Chennai
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

தேவனுக்கு நன்றி செலுத்துவதற்கும், தேவனுக்கு நன்றியுள்ளவர்களாயிருப்பதற்கும் வித்தியாசமுண்டு. நன்றியுடைமை என்பது ஒரு உணர்ச்சி. அதை சில வேளைகளில் நாம் உணரலாம், சில வேளைகளில் உணராமலுமிருக்கலாம். ஒரு சூழ்நிலையைக் குறித்து நன்றி உணர்வற்றவர்களாயிருக்கலாம். ஆனால் நாம் எப்போதும் ஸ்தோத்திரம் பண்ண அழைக்கப்படுகிறோம் *(1தெச.5: 18, எபே.5:20, பிலி.4:4)*

செய்யக்கூடாதது போன்ற ஒரு கட்டளையை ஏன் தேவன் கொடுத்தார்?

நமது மிகப் பெரிய வைத்தியர் நன்றி செலுத்துதலின் அதிசயமான குணமாக்கும் தன்மைகளை அறிந்திருக்கிறார். நன்றி செலுத்துவது தேவனுடைய சத்துவத்தை நமக்கு வெளிப்படுத்தி அவரது பார்வையில் சூழ்நிலைகளைப் பார்க்கும்படி நமது கண்களை உயர்த்துகிறது. நன்றி சொல்லும் கீழ்ப்படிதல் நமது உள்ளங்களை வேதனைகளிலிருந்து தூரப்படுத்தி நமது எண்ணங்களை அவரது திட்டங்களுக்கு நேராகக் குவியச் செய்கிறது.

(1-ம் பக்க தொடர்ச்சி)

தேவ ஆவியானவர் பரிசுத்தர். அவர் பரிசுத்தத்தை அளிக்கிறார். அவர் நம்மை நீதிமான்களென்று எண்ணுவது மட்டுமல்ல நம்மை நீதிமான்களாக்கு கிறார். அவர் நம்மை பரிசுத்தமுள்ள வர்களென்று எண்ணுவது மட்டுமல்ல, நம்மைப் பரிசுத்தவான்களாக்குகிறார். தூய ஆவியானவர் நம்மை உயிர்த் தெழுதலால் நிரப்பாவிட்டால் தூய வாழ்வு நம்மில் காணப்பட முடியாது.

நாம் மனப்பூர்வமாக நமது சொந்த வழிகள், பகைமை போன்ற வற்றை சிலுவையிலறைய வேண்டும். அவற்றை தேவன் சிலுவையிலறையப் பட்ட இயேசு கிறிஸ்துவின் சரீரத்தோடு மரணமடையச் செய்துவிட்டார். நாம் கிறிஸ்துவோடு எழுப்பப்பட்டுமிருக்கி றோம். நாம் புதுவாழ்வுடன் நடக்கலாம். கிறிஸ்துவின் தன்மை நம்மில் வந்து விடுகிறது. எனவே விசுவாசிக்கும் விசுவாசி தூய்மையாக வாழ முடியும். தூய ஆவியானவர் இப்படிப்பட்ட வர்கள் மீதிறங்கி சேவை செய்ய வல்லமை அளிக்கிறார்.

சிலுவையிலறையப்படுவதற்கு முந்தின மாலையில் இயேசு கிறிஸ்து தமது சீஷரை இந்த அனுபவத்திற்கு ஆயத்தப்படுத்தினார் *(யோவா.14:16)* அதுபோல பரத்திற்கேறுமுன்னதாகவும் சீஷரைக் கூட்டி "ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னி டத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத் தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்" அப்.*1:4-5*. இந்த அனுபவம் அவர்களுக்கு பெந்தெ கொஸ்தே நாளில் அனுபவமாயிற்று. தாகமாயிருக்கிற எவரும் இன்றும் இந்த அனுபவத்தைப் பெறமுடியும்.

சரித்திரப்பூர்வமான அந்த பெந்தெகொஸ்து மறுபடியும் வரமுடி யாது. ஆயினும் தனிப்பட்ட வாழ்வில் சிலுவையில் அறையப்படுதலும் பெந்தெகொஸ்தும் தேவை. கல்வாரியின் மற்றும் பெந்தெகொஸ்தே நாளின் அனு பவங்களின் முழு ஆசீர்வாதங்களையும் நாம் பெற்றுக்கொள்ள, வாஞ்சையுள்ள ஆத்துமாவுக்கு அளிக்க அவர் விரும்பு கிறார்.

இவ்வாறு நம்மை தூய்மைப் படுத்த பரிசுத்த ஆவியானவரும் ஏதுவா யிருக்கிறார். கொர்நேலியும் மற்றும் அவனது வீட்டாரைக் குறித்து, 'இருதயங் களை அறிந்திருக்கிற தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்தருளினது போல, அவர்களுக்கும் தந்தருளி அவர்களைக் குறித்து சாட்சி கொடுத்தார். விசுவாசத் தினாலே, அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்' அப்.*15:8-9*.

ஆவியானவரின் ஒத்தாசையில் பரிசுத்த வாழ்வு வளருதல்

முன்பு கூறப்பட்ட நிபந்தனை கள் நிறைவேற்றப்பட்ட பின்பு தேவன் தலையிட்டு பரிசுத்த வாழ்வை வளரச் செய்ய வேண்டும். தூய ஆவியானவர் பாவத்தைக் கழுகும்படி இயேசுவின் இரத்தத்தையும் சிலுவையையும் பயன் படுத்துவதோடு கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மாற்றுகிறார். பழக்கவழக்கங்கள், நடைமுறைகள், குணாதிசயங்கள் ஆகியவை பாவமற்றவைகளாயிருப் பினும் புது வாழ்வுக்குத் தகுதியற்றிருந் தால் அவற்றை மாற்றிவிட உதவி செய்கிறார்.

இந்த செயல் தொடரும்போது அது 'கிருபையில் வளருதல்' என அழைக்கப்படும். தூய ஆவியானவர் நமது வழிகாட்டியும் போதகரும் நமது குணங்களை உருவாக்குகிறவருமாயிருக் கிறார். நாம் உண்மையும் கீழ்ப்படிதலு முள்ளவர்களாயிருந்தால் தூய ஆவியான வர் தமது அற்புதமான கிரியைகளைச் செய்வார்.

தூய்மை பெருக வசனத்தின் பங்கு

யோவான் *15:3*-ல் இயேசு, 'நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தி னாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமா யிருக்கிறீர்கள்' என்றார். யோவான் *17:17*-ல் "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்மு டைய வசனமே சத்தியம்" என்றும் கூறியிருக்கிறார். அப். பேதுரு, "..... ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப் படிந்து, உங்கள் ஆத்துமாக்களை சுத்த மாக்கிக் கொண்டவர்கள்" என்று கூறுகிறார் *1 பே.1:22*.

சங்கீதக்காரன், 'உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது' சங்.*119:105* என்று குறிப்பிடுகிறார்.

நமக்கு வேதவசனங்கள் மிகவும் தேவை. அவை நமது விசுவாசம் மற்றும் கிறிஸ்தவ நடக்கைக்கு பாதுகாவலான சட்டமாயிருக்கின்றன. கிறிஸ்தவ வாழ்வில் நாம் வளர தேவவசனம் ஏதுவாயிருக்கிறது.

தூய்மையில் வளர கட்டுப்பாடு

எபிரேயர் *12*-ம் அதிகாரம் இதனைக் குறித்து முதல் பதின்மூன்று வசனங்களிலும் குறிப்பிடுகிறது. "அன்றி யும் நமது சரீரத்தின் தகப்பன்மார் ..... தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சகாலம் சிட்சித்தார்கள். இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்படி நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மை சிட்சிக்கிறார்" *12:10*.

கானான் தேசத்திலும் இஸ்ர வேலருக்கு எதிரிகள் இருந்தனர். கானானியர் உலகம், மாமிசம், பிசாசு ஆகியவைகளுக்கு ஒப்பானவர்கள், அல்லது அசுத்த ஆவிகளுக்கும் பழைய பழக்கவழக்கங்களுக்கும் ஒப்பானவர்கள். அவைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நாம் பலமுள்ளவர்களாக மாற்றப்பட எதிரிகள் வைக்கப்பட்டுள் ளார்கள். அவர் நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கிறார். தேவைப் படும் போது நம்மை சிட்சிக்கிறார்.

நம்முடைய நன்மைக்காகவே சில சூழ்நிலைகளை ஏற்படுத்துகிறார். தகுதியற்றவர்களைக் கொண்டும் அவர் போதிப்பதுண்டு. யோபு இவ்வாறு மூன்று சினேகிதரின் நிந்தனையான வார்த்தைகளினாலே போதிக்கப்பட் டான். பேதுரு சேவலாலும், பிலேயாம் கழுதையாலும், பவுல் முள்ளினாலும் போதனை பெற்றனர். தேவனைவிட ஈசாக்கை அதிகமாக நேசிக்கக்கூடாது என்பதை ஆபிரகாமும், ஒரு பெண்ணுக் குப் பயந்து ஓடிய எலியாவும் அச்சூழ் நிலைகள் மூலம் போதிக்கப்பட்டனர்.

இயேசு தாம் அடைந்த பாடு களினால் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார். பரிசுத்தமாக வாழ்ந்த இயேசுவும் அக்கினியைக் கடக்க வேண் டியதாயிருந்தது. எனவே கீழ்ப்படிதல் அவசியம்.

சிட்சையின் விஷயத்தில் உதைக் கவோ, மனச்சோர்பு அடையவோ கூடாது. இரண்டும் தவறானவை. அவை பரிசுத்தத்தில் பெருக தடையாகவும் அவர் நம்மை நடத்தும் பாதைக்கு எதிராகவும் அமைந்துவிடக்கூடும்.

(எபேசியர் 5:25-27 படிக்க)

கிறிஸ்துவின் மூலம் சுத்திகரிக்கப்படுதல்

Sanctification through Christ

Octavius Winslow (1808-1878)

சுத்திகரிக்கப்படுதல் என்பது கிறிஸ்துவின் சாயலில் வளருவதைக் குறிக்கிறது. நமது ஆண்டவர் கூறுவ தென்ன? ".... நான் சாந்தமும் மனத் தாழ்மையுமாயிருக்கிறேன், என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு என்னி டத்தில் கற்றுக் கொள்ளுங்கள்" மத்.*11:29*. அப். பவுல் இதே கருத்தை "..... தேவன் எவர்களை முன்குறித்திருக்கிறாரோ, அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்" ரோமர் *8:29*. "அன்பு டனே சத்தியத்தைக் கைக் கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற் றிலேயும் நாம் வளருகிறவர்களாயிருக் கும்படியாக அப்படிச் செய்தார்" எபேசி. *4:15*.

விசுவாசி இயேசுவைப் போல வளர வளர அவன் பரிசுத்தத்திலும் அதிகமதிகமாய் வளருகிறான். ஆனால் பழக்கவழக்கம், சிந்தை, ஆவி, அனுதின நடைமுறை இவற்றில் இயேசுவின் சாயலைவிட்டு தூரமாகும்போது தூய வாழ்விலும் வளரமுடிவதில்லை.

ஆனால் அவரது பெயரைத் தரித்துக்கொண்டு அந்த சாயலைப் பற்றிய எண்ணமற்றிருக்கிறார்கள். அவர்கள் தங்களை சோதித்துப் பார்த் தால் அவர்கள் இருக்கவேண்டிய நிலையி லிருந்து எவ்வளவு தாழ்வான நிலைக்கு வந்துவிட்டார்கள் என்பதை அவர்களே காணக்கூடும். தங்கள் கொள்கைகள், நோக்கங்கள், மனநிலை, ஆவி, அனுதின நடக்கை, சபையில் ஈடுபாடு, குடும்பத் தில் பங்கீடு ஆகியவற்றில் கிறிஸ்துவின் சாயல் இல்லாம லிருப்பதைக் காணலாம்.

கிறிஸ்துவின் சாயலைப் பாருங் கள். அது எத்தனை தாழ்மையும் பரிசுத்த முமானது! ஆவியில் எளிமை, இருதய தாழ்மை, செயல்பாடுகளில் பொறுமை,

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

தன்னை வெறுத்தல், ஜெப வாழ்வு, பிதாவின் மகிமைக்கான வாஞ்சை, மனித இரட்சிப்புக்கான ஆவல். அவரைப் போல வாழ்வது எத்தனை மேன்மையானது! "கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ள வேண்டும்" கொலோ.1:10. வளரும் கிறிஸ்தவன் கிறிஸ்துவின் மாதிரியை பின்பற்றி அவரது சாயலுக்கு ஒப்பாக வேண்டும்.

கிறிஸ்துவின் பெலன்

'என்னாலேயல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது' யோவா.15:5. சுயநம்பிக்கை, சுயபெருமை ஆகியவை சிலுவையிலறையப்பட்டு கிறிஸ்து இயேசுவிலுள்ள பெலனைப் பெற வேண்டும். நமது ஞானம் பெலவீனமானது, குறைவுள்ளது. எனவே அப். பவுல் 2 கொரி.12:10-ல் "அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" என்றும் 12:9-ல் 'என் கிருபை உனக்குப் போதும்' என்றும் பிலி.4:13-ல் 'என்னை பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு' என்றும் எடுத்துக் கூறுகிறார்.

கிறிஸ்துவின் வசனம்

பரிசுத்தமாக்கப்படுவதற்கு தேவனுடைய சத்தியம் மிக முக்கியமானது என்பதை மறக்க வேண்டாம். "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும் உம்முடைய வசனமே சத்தியம்" யோவா.17:17. இந்த சத்தியம் தூய ஆவியானவரது வல்லமையால் நமது ஆத்துமாவில் கொண்டுவரப்பட்டு சுத்திகரிக்கக்கூடியது. எனவேதான் அப்.பவுல் கொலோ.3:16-ல் "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக" என்கிறார். வேதவசனத்தின் உத்தம ஜெபத்தோடு கூடிய மாணவராயிருங்கள்.

கிறிஸ்துவின் இரத்தம்

கிறிஸ்துவின் இரத்தமில்லாமல் நம்மில் வாசமாயிருக்கும் பாவத்தின்மேல் வெற்றிபெற முடியாது. பாவ மன்னிப்பையும் பெறமுடியாது. பிசாசின் கிரியைகளை அழிக்கவே இயேசு மரித்தார். பாவம் சாத்தானால் ஏற்படுகிறது. அதன் வலிமையை நீக்கி வெற்றி பெறவும், அதை அடக்கவும், அதனால் ஏற்பட்ட அழிவுகளை அகற்றவும் அதன் குற்றப்படுத்துதலிலிருந்து விடுவிக்கவும், தேவகுமாரன் கோரச் சிலுவையில் மரித்தார். அவர் சகித்த சரீர பாடுகள், மனவேதனைகள், கெத்சமனேயில் அவர் அடைந்த வியாகுலம் யாவும் நமது பாவங்களுக்காகவே. "அவர் நம்மை சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், சகல நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மை சுத்திகரிக்கும்படி நமக்காகத் தம்மைத்தானே ஒப்புக் கொடுத்தார்" தீத்து.2:14.

கிறிஸ்துவின் மரணமும், பாவத்தின் சாவும் நெருங்கிய தொடர்புடையவை. சிலுவையில் சுத்திகரிப்பை நாடுங்கள். எளிய விசுவாசத்தோடும், பாவத்தின் பாரத்தோடும் சிலுவையண்டை கிட்டிச்சேருங்கள். அங்கு உங்களுக்கு அன்பு, வரவேற்பு மற்றும் பரிசுத்தமுண்டு. இந்த விலையேறப் பெற்ற இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் 1 யோ.1:7. அவ்வாறு சிலுவையினடியில் நீங்கள் வரும்போது சத்துரு உங்களை அணுக மாட்டான். பாவத்திற்கு உங்கள்மேல் அதிகாரமில்லை; சாத்தான் உங்களைக் குற்றப்படுத்த முடியாது.

கிறிஸ்துவின் பரிபூரணம்

கிறிஸ்துவிலுள்ள கிருபையின் பரிபூரணத்தைப் பாருங்கள். அது விசுவாசியின் சுத்திகரிப்புக்கு ஏதுவானது. "அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே... தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ள பிரியமுண்டாயிற்று" கொலோ..1:19. நம்மில் வாசம் பண்ணும் பாவம் என்னென்ன தேவைகளை ஏற்படுத்துகிறது? நம்மிலுள்ள அனைத்து கேடுகளையும் இயேசுவிடம் எடுத்துச் செல்லுகிறது. மேலும் முழங்காலிட்டு ஜெபிக்கத்தூண்டுகிறது. ஆவியில் எளிமையையும், இருதய நொறுங்குதலையும் தந்து இயேசுவின் மேல் முழு நம்பிக்கை யையும் வைத்து பாவத்தின் மேல் வெற்றிபெறச் செய்கிறது. குற்ற உணர்வு மனச்சாட்சியில் தங்கியிருக்க விட வேண்டாம். உடனுக்குடன் கிறிஸ்துவின் இரத்தத்தினண்டை வாருங்கள். விசுவாசம் மங்கலடையும் போது இயேசுவின் இரத்தத்தினண்டை வாருங்கள். உங்கள் ஆத்துமாவுக்கும் தேவனுக்குமிடையில் இடைவெளி வேண்டாம். பாவம் உடனுக்குடன் அறிக்கை பண்ணப் பட்டு தேவனோடுள்ள இனிய உறவை ஏற்படுத்துங்கள் (எபி.10:19-22 படிக்க)

கிறிஸ்துவில் வெற்றியுண்டு

உங்கள் இரட்சிப்பின் சேனாதிபதி உங்களுக்காகப் போராடி வெற்றி பெற்றுள்ளார். இப்போது மகிமையின் சிங்காசனத்தில் வீற்றிருந்து அனைத்து தேவைகளையும் சந்தித்து உற்சாகப் படுத்திக் கொண்டிருக்கிறார். இது விசுவாசத்தின் நல்ல போராட்டம். 1 தீமோ.6:12, 2 தீமோ.2:1, வெளி.12:11, ரோமர்.8:37 ஆகிய வசனங்களைப் படியுங்கள். அதோடு இறுதியில் 1 தெச. 5:23-ம் படியுங்கள்.

பரிசுத்தமான வாழ்வுக்கான ஒரு அழைப்பு

A call to holy living

Charles H. Spurgeon (1834-1892)

"..... நீங்கள் விசேஷித்து செய்கிறது என்ன?" மத்.5:47.

உலகமும், சபையும், நமது ஆண்டவரும் கிறிஸ்தவர்களிடமிருந்து அதிகமாய் எதிர்பார்க்கிறார்கள்!

1. அனேகர் அதிகமாய்ப் பேசுகிறார்கள். அதிகமாய்ப் பேசுகிறவர்கள் அதன்படி நடக்காவிடில் அவர்கள் ஏமாற்றுகிறவர்கள். மற்றவர்கள் சொல்லாதவிதமாக கிறிஸ்தவர்கள் தாங்கள் புதிதாக்கப்பட்டவர்கள் என்றும், பாவத்தின் கொடுமையை அறிந்தவர்களென்றும், பாவத்திலிருந்து விலகி மனந்திரும்பினவர்களென்றும், புதிய இருதயத்தையும், சரியான ஆவியையும் பெற்றவர்களென்றும், தேவ பிள்ளையென்றும், பரலோகத்திற்கு சுதந்தரவாளிகளென்றும் பெருமையாகக் கூறிக்கொள்கிறார்கள். ஆனால் மற்றவர்கள் இப்படிக் கூறிக்கொள்வதில்லை.

கிறிஸ்தவன் வாழ்வில் இது உண்மையாயிராவிட்டால் பொய்யும் மாய்மாலமாகவும், தேவனுக்கு விரோதமான தவறுமாயிருக்கிறது. தேவ தன்மையே இல்லாமலும், அசுத்தத்திலும் வாழ்ந்துகொண்டு தேவபிள்ளை என்று தன்னை கூறுவது குற்றச் செயலாகும். தேவபிள்ளைகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் கனமும் வாய்ப்பும் மிகப் பெரியது. கிருபையை தேவன் பெருகச் செய்திருக்கிறார். எனவே பெருமை பாராட்டலாகாது.

2. உண்மைக் கிறிஸ்தவன் மற்றவர்களைவிட சிசேஷித்தவன். அவன் மறுபடியும் பிறந்தவன். அவன் இருமுறை ஜனிப்பிக்கப்பட்டவன். புதிதாய் பிறந்தவனும், கிறிஸ்து இயேசுவில் புதிய சிருஷ்டியுமாயிருக்கிறான். இது கட்டுக் கதையல்ல, உண்மையான அனுபவம். நாம் மரணத்திலிருந்து ஜீவனுக்குக் கடந்து வந்தவர்கள். நமது ஆத்துமாக்களில் தேவ ஆவியைப் பெற்றவர்கள். அது நம்மில் பிறமனிதரைவிட உயரிய தன்மையை உண்டுபண்ணுகிறது. ஏனெனில் நாம் தெய்வீக தன்மையின் பங்காளிகள். ஒரு அரசன் அரசமாளிகையில் வாழுவது போல தேவன் நம்மில் வாசம் பண்ணுவார்.

அவர்கள் மற்றவர்களை விட விசேஷித்தவர்களானால் அவர்கள் மற்றவர்களைவிட அதிக பலனை உருவாக்க வேண்டும். நீங்கள் பெற்றுக் கொண்ட அளவிற்கு அன்பு உங்களைக் கொடுக்கச் செய்யும். உலகம் அஸ்தி பாரம் கொள்வதற்கு முன்பாகவே உங்களுக்குக் காண்பிக்கப்பட்ட அன்பின் அளவுக்கு ஏற்றதாக உங்கள் பரிசுத்தம் காணப்படுகிறதா? உங்கள் மீட்புக்காக இரட்சகர் ஏற்றுக்கொண்ட பாடுகளுக்கு இணையாக உங்கள் சேவை இருக்கிறதா?

உத்தம கிறிஸ்தவர்கள் பிறரைவிட அதிகமாகச் செய்ய வேண்டும். கிறிஸ்துவின் பெலத்தினால் அவர்கள் செய்ய முடியும் பிலி.4:13. அவர்கள் பெலவீனர்தான். ஆனாலும் ஆண்டவரில் பெலன் பெற்றவர்கள். இயேசு கிறிஸ்து தனது மேற்கொள்ளும் வல்லமையை அவர்களுக்கு அளிக்கிறார். அவர்கள் அவருடைய இரத்தத்தினாலே எதிரியை மேற்கொள்ள முடியும் வெளி.12:11. தேவன் தமது குமாரனை அவர்களுக்கு அளித்திருக்கிறார். அவருடைய வல்ல

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மையால் அவர்கள் பாவத்தை அழிக்க முடியும்.

நம்மில் வாழும் தூய ஆவியான வர் தெய்வீக தன்மையுடைய வர். அவர் நம்மிலே தங்கியிருப்பார். அவர் வாசம் பண்ணும் மனிதனின் வல்லமையை எவரும் கட்டுப்படுத்த முடியாது. எந்த ஒரு விசுவாசியும் 'இந்தப் பழக்கத்தை என்னால் விட்டுவிட முடியவில்லை' என்று கூறமுடியாது. நாம் நமது இருதயத்திலுள்ள விக்கிரகங்களைக் கவிழ்த்துப் போட வேண்டும். மேலும் 'இந்த உயரிய பக்தி நிலையை நான் எட்ட முடியாது' என்று கூறக்கூடாது. சர்வ வல்ல தேவன் நம்மைத் தரிப்பிக்கிறவர். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் வெற்றியைத் தருகிறார் 1 கொரி.15:57. "பரலோகத் திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறது போல நீங்களும் பூரண சற்குணராயிருங்கள்" மத்.5:48. நமது உயர்ந்த அழைப்புக்கு நேராகக் கடந்து செல்ல வேண்டும். அவருக்குப் பிரியமானவைகளைச் செய்ய தேவன் நம்மில் வாழ்ந்து ஒவ்வொரு நாளும் கிரியை செய்கிறார் பிலி.2:13. ஆகவே மரித்துப்போன பாவிகள் செய்யக்கூடாத தையும் ஆவியற்ற பாவிகள் செய்யக் கூடாததையும் நம்மால் செய்ய முடியும். ஒருவனிடத்தில் உள்ளதுதான் கேட்கப் படும். யாரிடம் அதிகம் கொடுக்கப்படு கிறதோ, அவனிடம் அதிகமாகக் கேட்கப்படும் லூக்.12:48. நமது அவிசுவாசத்தால் நமக்கு அருளப்பட்ட ஆவியை அவித்துப் போடக்கூடாது. பதிலாக தேவன் தரவிருக்கும் மேன்மை யான பரிசுத்த வாழ்வை வாஞ்சிப்போம். தேவ ஆவியானவரே, உமது கிருபையால் எங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் யாவும் சுத்திகரிக்கப்படட்டும்.

கிறிஸ்தவர்களிடம் பிறரைவிட அதிகமாக இருப்பதால் அவர்களிடம் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது. 'அவர்கள் ஏழைகள்' என்று சிலர் சொல்லலாம், உண்மைதான். ஆனால் மிகவும் ஏழையான கிறிஸ்தவனிடம் மிகவும் ஐசுவரியவானான அவிசுவாசி யிடம் காணப்படுவதை விடக் கூடு தலானவைகள் காணப்படுகின்றன. விசு வாசியான ஒரு தரித்திரன் விசுவாசமற்ற ஒரு அரசனோடு தனது நிலையை பரி மாற்ற ஒத்துக்கொள்ளவேமாட்டான். உலகம் முழுவதும் அவனுக்கு அளிக்கப் பட்டாலும் அவன் தன் இரட்சகரை விட்டு விடுவதில்லை. ஏழை விசுவாசி தேவன் தனது பங்கு என்பதால் உலக மேன்மைகளை உதறித் தள்ளுகிறான்.

ஒப்பிடப்படமுடியாத ஐசுவரிய முள்ள உடன்படிக்கையை கிறிஸ்துவில் நீங்கள் பெற்றிருக்கிறீர்கள். கிறிஸ்து அதி லிருப்பதால் கிறிஸ்துவே எல்லாவற்றிற் கும் எல்லாமானவர். நீங்கள் அவருடைய வர்களானபடியால் அவரது மாசற்ற மனுஷத்துவமும், அளவற்ற தேவத்துவத் தின் மகத்துவங்களும் உங்களுடை யவைகளே. எல்லாவற்றிற்கும் மேலாக தேவன் உங்களுடையவர். 2 கொரி.6:16-ன் படி ".... நான் அவர்களுக்குள்ளே வாசம் பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி அவர்கள் தேவனாயிருப்பேன்". அவர் உங்கள் தேவனாயிருப்பதால் ரோமர் 8:22-ன்படி 'தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக் கிறோம்'. வாழ்வின் நன்மைகள், தீமைகள் மற்றும் நித்தியம், நிகழ்காலம், வருங் காலம் யாவும் நம்முடையவைகள்.

எனவே நீங்கள் அதிகமாகச் செய்ய வேண்டியவர்கள். எண்ணி லடங்காத விலையேறப்பெற்ற நன்மை களைப் பெற்றுள்ளீர்கள். நன்மையும் கிருபையும் இன்னும் தொடரவிருக் கின்றன. ஆக பிறரைவிட அதிகமாகச் செய்யுங்கள். ஆண்டவரை அதிகமாக சேவியுங்கள். பிறர் எண்ணிப்பாராத அளவுக்கு உங்கள் சேவை விசேஷ மாயிருக்கக்கூடும்!

நமக்கு இன்னும் அதிகமான தூய ஆவி தேவை

We need more of the Holy Spirit

Wesley L. Duewel (1916-2016)

இன்று சபையின் தேவை ஆவியால் நிரப்பப்பட்ட மக்களென் றால் தவறல்ல. சபை ஆதியிலிருந்த அன்பை விட்டுவிட்டது (வெளி.2:6). அதன் ஆதி வல்லமையும் குன்றிவிட்டது. அதன் வளர்ச்சியும் குன்றிவிட்டது. இரட்சிக்கப் படுகிறவர்கள் அனுதினமும் சபையில் சேர்க்கப்படும் அனுபவம் சிற்சில இடங்களில் மட்டுமே. எனவே இத்தலை முறையின் சபைக்கு ஒரு பெரிய வாய்ப்பும், தேவையும், சவாலு முள்ளது.

ஆனால் சபைகளிலிருந்து தேவ மகிமை எடுபட்டுப் போயிற்று 1 சாமு. 4:21-ல் கூறப்பட்ட 'இக்கபோத்' அதாவது மகிமை எடுபட்டுப் போயிற்று என்பது அனேக தொழுகை இடங்களில் இன்று எழுதப்படலாம். நமது லௌகீக, பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இக்காலம் தேவ உணர்வற்றது. தேவனு டைய நியாயத்தீர்ப்பிலிருந்து தப்ப நாம் தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்த வேண்டும். சபையிலும், தனிப்பட்ட மக்களின் வாழ்விலும் தேவனுடைய உண்மையான பிரசன்னமும், வலிமை யும் வெளிப்பட வேண்டும். சபை எழுப்புதலடைய வேண்டும். தேவன் நம்மை இன்னொரு முறை சந்திக்க வேண்டும்.

முந்திய காலங்களைவிட சபை யின் பொறுப்பு அதிகரித்துவிட்டது. உலக ஜனத்தொகை வேகமாக உயரு வதால் கிறிஸ்துவின் செய்தியும் வேகமாக சொல்லப்பட வேண்டும். அனேகர் தேவ பகைஞராகவும், அரசுகள் தேவனுக்கு எதிராக செயல்படுகிறவைகளாகவுமிருக் கின்றன. எனவே ஆண்ட வரைப் பற்றிக் கேள்விப்பட்டிராத மக்களின் இரத்தப் பழி நம்மேலிருக்கிறது எசேக்.3:18.

சபைக்கு என்றுமில்லாத வாய்ப்புகளுமிருக்கின்றன. எழுத வாசிக்கத் தெரிந்தவர்களின் எண் ணிக்கை மிகத்துரிதமாய் வளருகிறது. எனவே வேதபுத்தகத்தையும் அதைச் சார்ந்த ஏடுகளையும் அவர்களால் வாசிக்க முடியும். இன்று மிக வேக மாகவும் எளிதாகவும் தூரமான பகுதி களுக்கு நாம் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல முடிகிறது. மற்றும் நவீன ஊடகங்கள் ஆகியவையும் பயன் படுத்தப்படுகின்றன.

உலகமெங்கும் காணப்படும் உத்தம தேவ பிள்ளைகளுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற நபர்களுக்காகவும், ஸ்தாபனங்களுக்காகவும் அவரைத் துதிப்போம். ஆனால் சபை தூக்கத்திலும், வெதுவெதுப்பான நிலையிலும், உயிரற்ற தும், வல்லமையற்றும் காணப்படுகிறது. ஆதித் திருச்சபை போல நம்மில் அனேகர் நமது தலைமுறையினரை ஆயத்தப் படுத்தவில்லை.

எழுப்புதல் எங்கு ஆரம்பிக்கிறது?

எழுப்புதல் எங்கு ஆரம்பிக்க வேண்டும்? இயேசு கிறிஸ்துவின் மாற்ற மடையச் செய்யும் வல்லமையை அறிந்த வர்கள் மூலமாக மட்டுமே அது ஏற்பட முடியும். எழுப்புதல் தேவனிடமிருந்து அவரது ஜனங்கள் மூலமாகவே ஏற்படும் 2 நாளா.7:14. உங்கள் சபையில் இன்று எழுப்புதல் உண்டா? அதற்கு நாம் காரணமாயிருக்க வேண்டாமா?

நாம் அவருக்காகப் பற்றி எரியும் போதுதான் சபை பற்றி எரிய முடியும். நாம் எத்தனை பெலமுள்ளவர்களா யிருக்கிறோமோ அத்தனையாக சபையும் தேவனுக்காக பெலமுள்ளதாயிருக்கும். நாம் ஆவியால் நிரப்பப்படாவிட்டால் சபையும் நிரப்பப்பட முடியாது. அன்று ஆவியானவரைப் பொழிந்த தேவன் இன்றும் இருக்கிறார்.

ஆதித் திருச்சபையை காட்டிலும் தெய்வீக எடுத்துக்காட்டுகளான விசுவாசிகள் நம்மிடமுண்டு. முதல் நூற்றாண்டைவிட எழுப்புதலால் ஏற்படும் மாற்றங்களை நாம் அறிந்திருக் கிறோம். ஆதித் திருச்சபையை விட கூடி ஜெபிக்க நம்மில் அனேகருண்டு. இன்னும் பதிலளிக்கப்படாமல் பரலோகில் சேமித்து வைக்கப்பட்ட ஜெபங்கள் ஆவியானவரைக் கொண்டு வரவும் வல்லமையைத் தரவும் ஆயத்தமா யிருக்கின்றன வெளி.8:1-5. அப்போஸ் தலர்கள் அவர்களுக்கு முன்னாலிருந்த வர்களின் கடின உழைப்பின் பலனைப் பெற்றது போல (யோவா.4:38) நமது ஜெபங்கள் உழைப்புகள் ஆகியவை பின்னால் மிகுந்த பலனைக் கொண்டு வரும்.

தேவனுடைய வாக்குத்தத்தங் கள் நமக்குரியவைகளே. கடைசி நாட்களில் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று வாசிக்கிறோம் அப்.2:17. மானிட தேவை முன்பிலும் அதிகரித்து வருகிறது. தேவன்

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். ஆனால் வித்தியாசம் என்ன?

அனேகர் நாங்கள் கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொண்டாலும், நமது வேத அறிவு வளர்ந்திருந்தாலும், கிறிஸ்தவ சரித்திரத்தில் ஆவியானவரின் பலத்த செயல்கள் எழுதப்பட்டிருந்தாலும் நம்மில் ஆதித் திருச்சபையில் காணப்பட்ட தேவ பிரசன்னமும் வல்லமையுமில்லை. தேவன் வாஞ்சிக்கிற அளவில் நாம் தேவ ஆவியால் நிரப்பப்படவில்லை.

எனவே சபைக்காக நாம் இவ்வாறு ஜெபிக்கலாம். "ஆண்டவரே ஒரு எழுப்புதலை அனுப்பும், அது என்னில் ஆரம்பிக்கட்டும். உமது சபையின் மீது உமது சகல வல்லமையோடும் இறங்கும். உமது ஷெக்கெய்னா மகிமை எங்கள் மத்தியில் மறுபடியும் வல்லமையாக இறங்கி வரட்டும்". உங்கள் உள்ளத்திலும் என் உள்ளத்திலும் ஒரு பசி வேண்டும். "ஆண்டவரே என்னை இன்னும் அதிகமதிகமாய் உமது ஆவியால் நிரப்பும். நான் இதுவரை அறியாத விதமாக உமது ஆவியால் நிரப்பும்".

கிழக்கு ஐரோப்பாவுக்கு அப்போஸ்தலனான பேசில் மலாஃப்

Basil Malof : Apostle to Eastern Europe (Part-1)

பகுதி-1

பேசில் மலாஃப் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒருவர். இழிவான மக்கள் மத்தியில் 20-ம் நூற்றாண்டின் மத்தியில் அப்போஸ்தலனாகப் பணிபுரிந்தார். இவரது பணியில் ஜேம்ஸ் அலெக்சாண்டர் ஸ்டீவர்ட் இணைந்து சில தேவபணிகளில் செயல்படும் வாய்ப்பைப் பெற்றார். இப்பகுதி ஸ்டீவர்ட் எழுதிய வாழ்க்கைச் சரித்திரமாகிய, 'அதிவிரைவாகச் செல்லும் மனிதன்' என்ற பகுதியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.

ஊழியத்திற்கான ஆயத்தம்

பேஸில் மலாஃப் 1883-ம் ஆண்டு லாட்வியாவிலுள்ள ஒரு போதகரின் இல்லத்தில் பிறந்தார். அப்போது லாட்வியா, ரஷியாவில் ஸார் ஆட்சியிலிருந்தது. அங்கு மத சுதந்திரம் இல்லை. பேஸில் தமது 15-வது வயதில் கிறிஸ்துவுக்குள் வந்தார். தமது 16-வது வயதில் முதன்முதலாக சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். 18 வயதில் ஒரு அலுவலகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது ரஷியாவில் அழிந்து கொண்டிருக்கும் திரள் கூட்டமான மக்களுக்கு சேவை செய்யும்படியாக தேவனால் அழைப்பினைப் பெற்றார்.

அக்காலத்தில் ரஷியாவில், ஆண்டவரை சேவிப்பதற்காகப் பயிற்சியளிக்கும் எந்த சுவிசேஷ பள்ளியுமில்லை. ஆனால் சார்ல்ஸ் H. ஸ்பர்ஜன் லண்டனில் நடத்தும் ஒரு போதகருடைய கல்வியைக் குறித்து கேள்விப்பட்டு அங்கு சென்றார். அப்போது அங்கு சார்ல்ஸ் ஸ்பர்ஜன் இருக்கவில்லை. அவரது மகன் தாமஸ் ஸ்பர்ஜன் பொறுப்பிலிருந்தார். அவர் பேஸிலை அன்புடன் வரவேற்றார். ஸ்பர்ஜனும் பிறரும் இதனை ஜெபத்திற்குப் பதிலாக எடுத்துக் கொண்டனர். இழிநிலையிலிருந்த மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க ஒருவரை ஆயத்தம் பண்ண அவர்கள் ஜெபித்துக் கொண்டிருந்தனர். இவர் மிகவும் தாலந்துகள் நிரம்பிய தனிமையான வாலிபனாயிருந்தார். அவர் ஆங்கிலம் கற்றுக்கொள்ள மிகவும் கஷ்டப்பட்டார். அவர் தேவ சித்தத்தை அறிந்துகொள்ள அதிக வாஞ்சையுடையவரும், பரிசுத்த வாழ்வை வாஞ்சிக்கிறவரும், வேத வசனத்தை ஆழமாகக் கற்றுக் கொள்ளுகிறவருமாயிருப்பதை அவர்கள் கண்டுகொண்டனர். ஃபின்னி, பிரெய்னார்டு குறிப்பாக ஜான் நாக்ஸ் போன்ற பக்தர்களின் வாழ்க்கை வரலாறுகள் அவருக்கு அதிக ஆர்வத்தை ஏற்படுத்தின. இந்தப் பள்ளியில் படிக்கும் போது அங்கு மன்றாட்டு, ஜெபம் ஆகியவற்றிற்குத் தனி பாடவேளைகள் இருந்தன. அவை அவரது ஊழிய காலத்தில் அவருக்கு அதிக உதவியாயிருந்தன.

பேஸில் லண்டனில் படித்துக் கொண்டிருக்கும் போது வேல்ஸ் எழுப்புதல் ஏற்பட்டது. அவர் அங்கு சென்று இரண்டு வாரங்கள் தங்கியிருந்தார். அங்கிருக்கும் போதுதான் தூய ஆவியானவரைக் குறித்து ஆழமாகவும் நெருக்கமாகவும் அறிந்து கொண்டார். அவருடைய வாழ்வு முற்றிலுமாக மாறுதலடைந்தது. தேவன் தமது மக்கள் மத்தியில் வல்லமையாக செயல்பட்டது அதற்குக் காரணமாயிருந்தது. அதன் பிறகு அவர் சாதாரண சுவிசேஷப் பணியில் திருப்தியடையவில்லை. தேவ ஆவியானவரின் அசைவையும், தேவ மகிமை, அக்கினி ஆகியவை அனைத்துக் கூடுகைகளில் வெளிப்பட வாஞ்சித்தார்.

St.பீட்டர்ஸ்பர்க்கில் ஊழிய ஆரம்பம்

1907-ல் பயிற்சிப்பள்ளியில் உயரிய மதிப்பெண்களுடன் வெளிவந்த அவர் ரஷியாவில் வேலை செய்வது எப்படி என்பதற்காக ஆண்டவரை ஆவலோடு தேடினார். அதிர்ஷ்டவசமாக ரஷியாவின் சகரவர்த்தி நிக்கோலாஸ் II 'மார்க்க சுயாதீனத்திற்கான ஒரு பிரகடனம்' செய்திருந்தார். பேஸில் உடனே தனது 24-வது வயதில் பீட்டர்ஸ்பர்க் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் பணி ஆரம்பித்தார். அப்போது முன்பு ஒரு சுவிசேஷகன் மூலமாக கிறிஸ்துவுக்குள் வந்த சில அரச குடும்ப பெண்மணிகளோடு தொடர்பு ஏற்பட்டது. பேஸில் அரசுமாளிகைகளில் உயர்குல மக்களுக்கும், அரசு அதிகாரிகளுக்கும் கூடுகைகள் நடத்தினார். ஏராளமான வேத புத்தகங்களையும், புதிய ஏற்பாடுகளையும் கிறிஸ்தவ மாத இதழ்களையும், புத்தகங்களையும், துண்டு பிரதிகளையும் அவர் அனுப்ப முடிந்தது. இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை பெரிய அரங்குகளை வாடகைக்கு எடுத்து கூடுகைகள் நடத்தினார். இங்கு 300 முதல் 1000 மக்கள் வரை உட்கார்ந்து அவரது வல்லமையான சுவிசேஷத்தைக் கேட்டனர். ஏராளமான பணி செய்யும் வகுப்பை சேர்ந்த மக்கள் மிகுந்த மனமாற்றமடைந்தனர். அவர்களுடைய நேர்மையால் அவர்களைப் பணியமர்த்தினவர்கள் ஆச்சரியமடைந்தனர். அவர்கள் தங்கள் எஜமான்களுக்கு உண்மையாயிருந்து சிறந்த சாட்சிகளாய் சுவிசேஷத்தைப் பிறருக்கு அறிவிக்க உபதேசித்தார்.

1911-ல் இவரது வழிகாட்டுதலின் படி பீட்டர்ஸ்பர்கில் மிகப்பெரிய அழகிய ரஷியன் இவாஞ்சலிக்கல் ஆலயம் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதில் 2000 மக்கள் உட்கார முடியும். நூற்றுக்கணக்கானோர் கிறிஸ்துவுக்குள் வந்தனர். அவர்கள் தங்கள் தங்கள் இடங்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் சென்றனர். கூட்டம் கூட்டமாக சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பவர்கள் தூரமான இடங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

1913-ல் அவரது பிரசங்கத்தால் இரட்சிக்கப்பட்ட பார்பரா கோவாலெஸ்கி என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். அவள் அதிக புத்திகூர்மையும், ஆழமான ஆவிக்குரிய தன்மையுமுடைய வளாயிருந்தபடியால் அவருக்கு உத்தம துணைவியாயிருந்தாள். அவள் தனது 10 குமாரரையும், 3 குமாரத்திகளையும் தேவனை நேசிப்பதிலும், அவருக்கு பயப்படுவதிலும், அவரை சேவிப்பதிலும் கவனமாக வளர்த்தாள்.

மாஸ்கோவில் பணியும் எதிர்ப்பும்

St.பீட்டர்ஸ்பர்கில் பணி நன்கு நிலைபெற்ற பின் அவர் மாஸ்கோவில் பணி ஆரம்பித்தார். நாடு முழுமைக்கு முள்ள சபைக்கு இந்நகரம் மையமாயிருந்தது. பேஸிலது பிரசங்கத்தால் ஒரு சிறு கூட்டம் விசுவாசிகள் எழும்பினர். இவர்களது உற்சாகத்தால் புதிய விசுவாசிகள் தூண்டுதலடைந்து நகரம் முழுவதும் ஆத்தும ஆதாயப் பணியிலீடுபட்டனர். இது பூர்வீக சபைத் தலைவர்களை அதிகமாக விழிப்படையச் செய்தது. அனேக பாதிரிமார் உத்தமமாயிருந்தாலும் அவர்களது போதனைகள் மக்கள் கிறிஸ்துவை ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்ள வழி நடத்தவில்லை. எனவே பேஸில் அவர்களது ஆராதனையை உதாசீனம் செய்வதாகவும், பாரம்பரிய சடங்குகளுக்கு எதிராக தேவதூஷணம் செய்வதாகவும் எண்ணினர். எனவே பேஸிலது பணிகளை அழிக்கத் தீர்மானித்தனர். அவர் அதிகமாக ஜெபித்தார். பத்திரிகையாளர்களும் பகிரங்கமாகக் கண்டனம் செய்தனர். ஆனால் மக்கள் அவரது அபிஷேகம் நிரம்பிய செய்திகளைக் கேட்க அலை அலையாக வந்தனர். அவர் ஜீவனுள்ள கிறிஸ்துவை அவர்களுக்குச் சுட்டிக் காண்பித்தார். தேவ ஆவியானவர் பலமாகக் கிரியை செய்தபடியால் ஜீவ தண்ணீருள்ள நதிகள் St. பீட்டர்ஸ்பர்கிலிருந்தும் மாஸ்கோவிலிருந்தும் அற்புதமான ஜீவனளிக்கும் வல்லமை

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யோடு நாடு முழுவதும் பாய்ந்து சென்றது. தனது தாய்நாட்டின் தலை நகராகிய ரிகாவிலும் அவர் ஒரு பெரிய ஆலயத்தைத் திறந்தார். இவரோடு உழைத்து பல இடங்களுக்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றவர் களில் சிலர் சிறையிலடைக்கப்பட்டனர். சிலர் இரத்த சாட்சிகளாய் மரித்தனர். ஆனால் எல்லா வகையான சமூகங்களி லுமிருந்து மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர்.

கைது செய்யப்பட்டார்

திடீரென ராணுவ போலீஸிட மிருந்து உடனடியாக அவர் கைது செய்யப்பட்டு சைபீரியாவுக்கு நாடு கடத்தப்படுவதாக அறிவிப்பு வந்தது. மூத்த மகள் 3 வயது குழந்தை தாயோடு விடப்படும் ஒரு நிலை. மிகுந்த மன பாரத்தோடு கணவனும் மனைவியும் பிரிந்தனர். சிறைக்கதவு அடைக்கப் பட்டது. அன்றிரவு மூன்று அழுக்கான கைதிகளுடன் தூங்க வேண்டியதா யிற்று. தனது அருமை ஆண்டவர் இரு கள்வர்கள் மத்தியில் அறையப்பட்டதை அவர் எண்ணிப் பார்த்தார்.

இரண்டு நாட்களுக்குப் பின்பு அதிக அளவிலான ஜெபத்தாலும், அவரது கைதும் நாடுகடத்துவதற்கான அறிவிப் பும் அரசாங்க அந்தரங்க ஆலோசனை அறையில் மாற்றப்பட்டன. சைபீரியா அனுப்பப்படுவதற்குப் பதிலாக ரஷியாவை விட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டது. அவர் ஆயத்தப் பட 10 நாட்கள் கொடுக்கப்பட்டன. இதற்குள்ளாக அவர் 10 எழுப்புதல் கூடுகைகளை நடப்பித்தார். சுமார் 500 ஆத்துமாக்கள் இரட்சிப்படைந்தனர். சுவிசேஷ தலைவர்களால் இந்த இளம் தம்பதியினர் ஸ்வீடனில் வாழும் வாய்ப்பைப் பெற்றனர். - தொடரும்

News & Prayer Briefs

ஜம்மு பிராந்தியத்தின் எல்லைலோர மாவட்டங் களிலும் பள்ளி, கல்லூரிகள் திறக்கப்பட்டன.

காஷ்மீரில் பதற்ற நிலை நீடிப்பதால், அங்கு கட்டுப்பாடுகள் தொடர்ந்து அமலில் இருக்கின்றன. கடைகள் அடைக்கபட்டு, வாகன இயக்கம் முடங்கி உள்ளதால் மக்கள் பெரும் இன்னலுக்கு ஆளாகி உள்ளனர்.

காஷ்மீரில் தற்போது பாரம்பரிய திருமண காலம் ஆகும். ஆனால் அங்கு அமலில் உள்ள கடுமை யான கட்டுப்பாடுகளால் இந்த திருமணங்கள் பெரும்பாலும் ரத்து செய்யப்படுகின்றன.

பரிசுத்தப்படுத்துகிறவரண்டை கிட்டிச் சேருவோம்

Draw near to the one who sanctifies

Rich Carmicheal

"பரிசுத்தமில்லாமல் ஒருவரும் தேவனை தரிசிக்க முடியாது" எபி.12:14. "நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் ..... கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார்" எபே.1:4. "தேவன் நம்மை அசுத்தத்திற்கு அல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்" 1 தெச.4:7. "நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்த ராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" 1 பேதுரு 1:16. நாம் பரிசுத்தமாக வாழ்வது அவரது சித்தம். நாம் அவ்வாறு வாழும் போது அவர் சந்தோஷப்படுகிறார் 1 தெச. 4:1-3. பரிசுத்த வாழ்வின் மூலம் நாம் அவரை கனப்படுத்துகிறோம் 2கொரி. 7:1. நாம் அவருக்கு மகிமையைக் கொண்டு வருகிறோம் 2 தெச.1:10. நாம் அவரது மகிமையில் பங்காளிகளாகி றோம் 2 தெச.2:13-14. பரிசுத்த வாழ்வுக்கு நேராக அழைக்கப்படும் போது நாம் அதை மறுத்தால் அது தேவனை மறுப்பதற்கு இணையாகும் 1 தெச.4:8.

தூய வாழ்வைக் குறித்த இரு சத்தியங்களைக் குறிப்பிடுகிறேன். முதலாவது பரிசுத்த வாழ்வு கர்த்தரு டைய பணி. நாம் புனிதப்படுத்தும் அவருடைய ஆவியால் பரிசுத்த வாழ்வைப் பெறுகிறோம் (2 தெச.2:13) இயேசுவின் இரத்தத்தின் மூலமாகவும் (எபி.9:13-14) ..... அவருடைய வார்த் தையின் சத்தியத்தின் மூலமாகவும் (யோவா 17:17) அவருடைய திட்டம் கிருபை ஆகியவற்றின் மூலமாகவும் (2தீமோ.1:9) நாம் தூய வாழ்வைப் பெறுகிறோம். அவரே நம்மைப் பரிசுத்த மாக்குகிறவர் (எபி.2:11; 13:12) உண்மை யில் இயேசுவே நமது ஞானமும், நீதியும், பரிசுத்தமும் மீட்புமானார் (1கொரி.1:30).

இரண்டாவதாக அது முதல் சத்தியத்துடன் மிக நெருக்கமானது. தூய வாழ்வு ஆண்டரோடுள்ள நமது உறவில் எப்போதும் வேரூன்றியுள்ளது. பரிசுத்தத் தின் வெளித்தோற்றத்தை மட்டும் விரும்பினால் அது மாய்மாலம். அதில் வல்லமையில்லை.

எனவே நமது ஆண்டவரோ டுள்ள நமது உறவை நாம் ஆழப்படுத்த வேண்டும். நாம் அவரை நெருங்கிச் சேரும்போதும் நமது வாழ்வை அவருக்கு அர்ப்பணிக்கும் போதும் அவரது பரிசுத்தத்திற்குப் பங்காளிகளாகிறோம் எபி.12:9-10. அவருக்கு நேராக நமது அன்பிலும், பயபக்தியிலும் நாம் வளரும் போது நாம் பாவத்தையும், அவரிட மிருந்து நம்மைப் பிரிப்பதற்கு ஏதுவான எதையும் தவிர்ப்போம். 2 கொரி.7:1-ன் படி, "மாம்சத்திலும், ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மை சுத்திகரித்துக் கொண்டு பரிசுத்தமாகு தலை தேவ பயத்தோடே பூரணப் படுத்தக்கடவோம்". "உங்களை அழைத் தவர் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் உங்கள் நடக்கைகள் எல்லா வற்றிலேயும் பரிசுத்தமாயிருங்கள்" 1 பேதுரு 1:15. ".... கறையற்றவர்களும், பிழையற்றவர்களுமாய் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக் கிரதையாயிருங்கள்" 2 பேதுரு 3:14.

நீங்கள் "பரிசுத்தத்தில் மகத்துவ முள்ள" (யாத்.15:11) ஆண்டவரோடு நெருங்கிச் சேரும் போதும், எபி 7:26-ல் கூறப்பட்டபடி "பரிசுத்தரும், குற்றமற்ற வரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்த வருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார். நாம் அவரைக் கிட்டிச் சேரும்போது அவர் நம்மைக் கிட்டிச் சேருவார் யாக்.4:8. அவருக்குப் பிரியமானதை நம்மில் நடப்பிப்பார் எபி.13:21.

"சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கு வாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும் போது குற்றமற்ற தாயிருக்கும்படி காக்கப்படுவதாக" 1 தெச.5:23.

நிர்வாக வசதிக்காக

நீங்கள் எங்களை தொடர்பு கொள்ளும் போது ஒவ்வொரு தடவையும் கீழ்காணும் விபரங்களை தயவாய் தெரிவியுங்கள், நன்றி.

பதிவு எண் :
பெயர் :
முகவரி :
பின்கோடு :
தொலைபேசி :
அலைபேசி :

Registered with the Registrar of News Paper For India under R.N.I. TN TAM 11967/'67
Date of Publication : 27th of Every month

Book Packets contains periodicals

If un-delivered please return to:
VARUKAYIN THOOTHAN
Nagercoil - 629 001. INDIA.
Mobile: 9543221008

To

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason